செய்தி



மீனவ கிராமத்தை செல்வம் கொழிக்கும் நகரமாக மாற்ற உதவிய தமிழர்கள்

# சிங்கப்பூர்த் தமிழர்களின் 200 ஆண்டு வரலாறு

**சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் சிங்கப்பூர்த் தீவை விலைக்கு வாங்கி பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியை ஏற்படுத்திய 200ஆம் ஆண்டு நிறைவை 2019ல் கொண்டாடவிருக்கிறது சிங்கப்பூர்.**



*(ராஃபிள்ஸுடன் தமிழர்கள் சிங்கப்பூருக்கு வந்த "இந்தியானா" கப்பல்)*

அதே ஆண்டில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் 200 ஆண்டு வரலாற்றைக் கூறும் நூல் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டுள்ளது தமிழ் மின்மரபுடைமைக் குழு.

சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டைக் கொண்டாட சிங்கப்பூரின் 50 ஆண்டுத் தமிழ் இலக்கியத்தை மின்மயமாக்கி நாட்டுக்கு அர்ப்பணித்த அதே தமிழ் மின்மரபுடைமைக் குழுதான் இந்தப் புதிய, இதற்கு முன் மேற்கொள்ளப்படாத முயற்சியில் ஈடுபடவிருக்கிறது.



*(ராஃபிள்ஸுடன் தமிழர்களுக்கு தலைமை ஏற்று வந்த நாராயணப் பிள்ளை)*

ராஃபிள்ஸ் 197 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் உடன்பாட்டில் கையெழுத்திட்ட தினம் இன்று (பிப்ரவரி 6). அதன் 200ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதத்தில் இன்னும் மூன்று ஆண்டுகளில் சிங்கப்பூர்த் தமிழர்கள் குறித்த வரலாற்று நூலை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக இன்றைய தினம் அறிவித்துள்ளது தமிழ் மின்மரபுடைமைக் குழு.

ராஃபிள்ஸ் காலத்திலிருந்து சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கையையும் வளர்ச்சியையும் அந்த நூல் தொகுக்கவிருக்கிறது. “சிங்கப்பூர்த் தமிழர்களின் 200 ஆண்டு வரலாறு” என்று தற்காலிகமாகப் பெயரிடப்பட்டிருக்கும் அந்த நூல் சிங்கப்பூர்த் தமிழர்கள் குறித்த வரலாறு, பொருளியல், சமூக, கலாசார அம்சங்களில் கவனம் செலுத்தும்.

திட்டத்தின் பொறுப்பாளராகத் தமிழ் மின்மரபுடைமைக் குழுவால் நியமிக்கப்பட்டிருக்கும் திரு அருண் மகிழ்நன், “இந்த நூல் சிங்கப்பூர்த் தமிழர்களின் வரலாற்றை ஆதாரங்களின் அடிப்படையில் பொது மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் அமைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்,” என்றார். அதே நேரத்தில் இந்த நூல் சாதாரண வாசகர்களும் படித்துப் பயன்பெறும் அளவுக்கு எளிமையான பாணியில் எழுதப்படும் என்றும் அவர் கூறினார்.



*(திட்டத்துக்கு பொறுப்பேற்றிருக்கும் திரு அருண் மகிழ்நன்)*

தமிழர்கள் குறித்து இவ்வளவு பெரிய அளவில் ஒரு நூல் உருவாகப்போவது இதுவே முதல்முறை என்பதால், கல்வியாளர்கள், சமூகத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் போன்றோரிடம் பரவலாகக் கலந்தாலோசித்த பிறகே நூலின் உள்ளடக்கத்தை முடிவு செய்யத் தமிழ் மின்மரபுடைமைக் குழு விரும்புகிறது.

"இது ஒரு கன்னி முயற்சி என்பதால் எங்களுக்கு அனைத்துவித உதவிகளும் வழிகாட்டுதலும் தேவை," என்றார் திரு அருண். தமிழர்களின் கதையை உருவாக்கச் சமூகம், அரசாங்க அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து பழைய படங்கள் தகவல்கள், வரலாற்று ஆவணங்கள், தனிநபர் வரலாறுகள் போன்றவற்றைப் பெற விரும்புகிறது இந்தக் குழு.

முன்னணித் தமிழ்க் கல்வியாளரும் நூல் திட்டக் குழுவின் உறுப்பினருமான டாக்டர் சுப தி ண்ணப்பன், "ஆசிரியர்களும் மாணவர்களும் பயில்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் அதிகாரபூர்வமான தகவல்களைத் தரும் ஒரு சிறந்த வளமாக அந்த நூலை உருவாக்குவது இந்தத் திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கம்," என்றார். தமிழ்ச் சமூகத்தின் சில அம்சங்கள் குறித்து ஏற்கெனவே சில நூல்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டிருந்தாலும் இது போன்ற விரிவான வளம் இதுவரை இல்லை என்றும் அவர் சொன்னார்.



*(நூல் திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் சுப திண்ணப்பன்)*

தமிழரும் பிறரும் படிக்கும் வகையில், தமிழிலும் ஆங்கிலத்திலும் அந்த நூல் பதிப்பிக்கப்படவுள்ளது. இரண்டு நூல்களின் உள்ளடக்கமும் பெரும்பாலும் ஒன்றுபட்டு இருந்தாலும், சிறு சிறு வேறுபாடுகளும் இருக்க வாய்ப்புண்டு என்று குறிப்பிட்டார் திரு அருண்.

< சிங்கப்பூர்

mediacorp Mediacorp News Group © 2016